**செய்தி வெளியீடு எண்: 424** **நாள்: 02.07.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (2.7.2018) தலைமைச் செயலகத்தில், பொதுத்துறையில் ஒட்டுநர்களாக பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான 3 ஒட்டுநர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

பொதுத்துறையில் ஒட்டுநர்களாக பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான திரு. எம். சுரேஷ்பாபு, திரு எஸ். ரவிச்சந்திரன் மற்றும் திரு.வி.சௌந்தரராஜன் ஆகியோரின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில், அலுவலக உதவியாளர் மற்றும் துப்புரவு பணியாளர் பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பொதுத்துறைச் செயலாளர் டாக்டர் ப. செந்தில் குமார், இ.ஆ.ப., பொதுத்துறை துணைச் செயலாளர் (மரபு) திரு.த. மோகன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 2.7.2018**